இனிய மாலை வணக்கத்துடன் உங்களனைவரையும் மிகவும் அன்புடன் வரவேற்கிறேன். அமெரிக்க கடற்படையணி நிறுவப்பட்டு 247 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு நடைபெறும் இன்றைய விழாவில் உங்களனைவருடனும் இணைந்து கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடற்படையணியானது மெச்சத்தக்க அதன் வரலாறு முழுவதும் அமெரிக்க இராஜதந்திர கடமைகளுடன் தொடர்புபட்டுள்ளது. கடற்படையணிக்கும் இராஜாங்கத் திணைக்களத்திற்குமிடையே நீண்டகாலமாக நீடித்திருக்கும் உறவானது கடற்படைப் பாதுகாவலர் நிகழ்ச்சித்திட்டத்தின் உருவாக்கத்துடன் 1948ஆம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக ஆழமடைந்தது. இன்று, கடற்படைப் பாதுகாவலர்கள் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களில் சேவையாற்றுவதுடன் அது அமெரிக்காவின் பிரசன்னம் மற்றும் புரவலர் நாடுகளுடனான எமது உறவுகளிலான முதலீடு ஆகியவற்றின் ஒரு புலப்படும் குறியீடாகவும் பலரால் நோக்கப்படுகிறது.

தற்போது கொழும்பு தூதரகத்திலுள்ள கடற்படைப் பாதுகாவலர் பிரிவானது எனது சொந்த மாநிலமான கலிபோர்னியாவைச் சேர்ந்த இரண்டு கடற்படையினரைக் கொண்டுள்ளதுடன், மசாசூசெட்ஸ், ஓக்லஹோமா, டெக்சாஸ், நெவாடா, மிசோரி மற்றும் புளோரிடாவைச் சேர்ந்தவர்களையும் கொண்டுள்ளது. எமது நாட்டின் பல்வேறு பகுதியினையும் சேர்ந்த இக்கடற்படையினர் அமெரிக்காவின் மிகப்பெரிய பலங்களில் ஒன்றான, பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு, ஒவ்வொரு தனிநபர்களிடமுமுள்ள தனித்துவமான திறமைகளைப் பயன்படுத்துவதற்கான எமது விருப்பத்தினை உருவகப்படுத்துகிறார்கள். எமது வளங்களையும் பணியாளர்களையும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு தூதரகத்தில் உள்ள எமது கடற்படையினரை நாம் நம்பியுள்ளோம். நான் அலுவலகத்திற்கு எவ்வளவு முன்கூட்டியே வருகைதந்தாலும் அல்லது எவ்வளவு தாமதமாக வெளியேறிச் சென்றாலும், ஒவ்வொரு நாளும் நான் இங்கு பார்க்கும் முதல் மற்றும் கடைசி நபர்கள் அவர்கள்தான்.

கொரியப் போர் நடைபெற்ற காலத்தில் தமது சிறுபராயத்தில் இருந்த எனது பெற்றோருக்கு சீருடை அணிந்த அமெரிக்கப் பாதுகாப்புப் படையினரின் பிரசன்னம் ஒரு பாதுகாப்பு உணர்வை அளித்தது என்பதை தெரிந்துகொண்டபோது நான் ஆறுதலடைந்தேன். போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்கப் படைகள் பாதுகாப்பையும்  அமைதியையும் வழங்கின. அவர்கள் வழங்கிய ஹெர்ஷீஸ் கிஸ்ஸஸ் எனும் சொக்லேட்டுகள் பல ஆண்டுகளுக்குப் பிறகு எமது வதிவிடமாக மாறிய அமெரிக்காவின் சுவையின் ஒரு சிறிய முதல் பகுதியை எமக்கு கொடுத்ததை எனது பெற்றோர்கள் மிகவும் பிரியத்துடன் நினைவுபடுத்துவர். கொரியப் போர் ஏற்படுத்திய சவால்களுக்கு மத்தியிலும், எமது நாடு எனது குடும்பத்தில் ஏற்படுத்திய நம்பிக்கையினை நினைவூட்டுவதற்காக, இன்று மாலை இங்கிருக்கும் ஒவ்வொரு மேசையிலும் ஹெர்ஷீஸ் கிஸ்ஸஸ் எனும் அந்தச்சொக்லேட்டுகள் வைக்கப்பட்டுள்ளன - அவை உங்களது வாழ்க்கையிலும் அமெரிக்கா நம்பிக்கையைத் தூண்டிய காலங்களை நினைவூட்டி உங்களது முகத்திலும் அங்கீகாரத்தின் புன்னகையைக் கொண்டு வரட்டும். அமெரிக்காவில் ஒரு குடியேறியாக வாய்ப்புகள் பல நிறைந்த ஒரு உலகத்துடன்

வளரக்கிடைத்தது மற்றும் இராஜதந்திரத் துறையில் ஒரு பணியினைத் தொடரக்கிடைத்தது என்பன எனது அதிர்ஷ்டமாகும். இராஜதந்திரிகளாக, நாங்கள், ஒரு வலுவான சேவை நெறிமுறைகளையும், நமது நாட்டின் மிக உயரிய ஜனநாயகக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான ஒரு அர்ப்பணிப்பையும் எமது இராணுவ சகாக்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். எமது வீடுகளிலிருந்து வெகு தொலைவில் வசிப்பதன் சிரமங்களை நாங்கள் அறிவோம். எம்மிடமுள்ள வலுவான பணி உணர்வின் காரணமாக அதனுடன் தொடர்புடைய எந்தவொரு சவால்களையும் நாங்கள் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்கிறோம். எமக்கருகிலுள்ள எமது தோழர்களுடன் ஒருவருக்கொருவர் ஆதரவான ஒரு சமூகத்தைக் கட்டமைக்க நாம் ஒன்றிணைகிறோம். எமது அந்த ஆதரவு வலையமைப்பின் ஒரு பகுதியாக அற்புதமான இலங்கையின் சகபணியாளர்கள் மற்றும் நண்பர்களைப் பெற்றிருப்பது எமது விசேட அதிர்ஷ்டமாகும்.

நாம் அனைவரும் ஒருவரையொருவர் கவனித்துக்கொள்கிறோம். எங்கள் கடற்படைப் பாதுகாவலர்களைப் பொறுத்தவரை, சோகமான சூழ்நிலைகளில் முதலில் பதிலளிப்பது அவர்கள்தான். ஆபத்தை விட்டு மற்றவர்கள் ஓடும்போது ஆபத்தை நோக்கி ஓடுவது அவர்கள்தான். 1968 டெட் தாக்குதலின் போது வியட்நாமிலுள்ள எமது தூதரகத்தைப் பாதுகாத்தது முதல், கென்யாவிலுள்ள எமது தூதரகம் மீது 1998இல் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலளித்தது வரை, கடற்படையினர் தொடர்ந்தும் தன்னலமின்றி, வீரத்துடன் பணியாற்றுகிறார்கள். நமது இராஜதந்திர வளாகங்களையும் சகபணியாளர்களையும் பாதுகாப்பதற்காக பலர் அதிகபட்ச தியாகங்களைச் செய்துள்ளனர். பல இளம், திறமையான கடற்படையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் இந்த ஆபத்துக்களை அறிந்திருந்தும், உலகெங்கிலும் உள்ள எமது தூதரகங்கள் மற்றும் கொன்சியுலர் அலுவலகங்களைப் பாதுகாக்கும் பணியை தாமே முன்வந்து விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வதானது அவர்களின் தைரியம், தயார்நிலை மற்றும் திறமையைப் பறைசாற்றுகிறது. அமெரிக்கக் கடற்படை வீரர்களின் வீரம் நமது தேசத்திற்கு கிடைத்த ஒரு பெருமையாகும்.

நவம்பர் 10ஆம் தேதி கடற்படையணியின் பிறந்த தினமானது, படைவீரர் தினத்திற்கு முந்தைய நாள் வருகிறது. கடற்படை வீரர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு நான் இப்போது சிறிது நேரம் ஒதுக்க விரும்புகிறேன். கடற்படையில் தற்போது பணியாற்றும் மற்றும் முன்பு பணியாற்றிய தற்போது இங்கு எம்முடன் இருக்கும் கடற்படை வீரர்களில் எழுந்து நிற்க இயலுமான அனைவரையும் தயவு செய்து எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (சிறிது நேர இடைவெளிக்குப்பின்) உங்களனைவருக்கும் எனது நன்றிகள். சீருடையில் பணியாற்றும் அல்லது பணியாற்றிய அனைவருக்கும் உங்களது அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களுக்காக இங்குள்ள அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். உங்கள் அர்ப்பணிப்பு, தொழில்வாண்மை மற்றும் துணிச்சலை நாங்கள் அங்கீகரித்து பாராட்டுகிறோம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பேணுவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அவசியமான பணியினை மேற்கொள்வதற்குத் தேவையான காவல் மற்றும் பாதுகாப்பின்

முதுகெலும்பாக கொழும்புத் தூதரகத்திலுள்ள எமது கடற்படைப் பாதுகாவலர்களின் பிரசன்னம் விளங்குகிறது. அமெரிக்காவிற்கான பயணங்களுக்கு வசதிசெய்வது; சர்வதேச பரிமாற்றங்கள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக மக்களுக்கிடையிலான உறவுகளை வளர்ப்பது; பரஸ்பர செழிப்புக்கான எமக்கிடையிலான பொருளாதார பரிமாற்றத்தை மேம்படுத்துதல்; பாதுகாப்பு ஒத்துழைப்பினை அதிகரித்தல்; எமக்குப் பொதுவான மனித உரிமை இலக்குகள் தொடர்பாக விவாதித்தல்; மற்றும் நல்லாட்சியை ஊக்குவித்தல் உட்பட பலபரந்த அளவிலான விடயங்களில் எனது குழு பணியாற்றுகிறது. இன்று மாலை இங்குள்ள எமது விருந்தினர்களும் இந்த முயற்சிகளில் பங்கெடுத்து, எமது இருதரப்பு உறவுகளை மேலும் முன்னேற்றுவதற்கு அயராது உழைக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எம்மனைவரதும் சார்பாக, கடற்படையணியின் 247வது பிறந்தநாளுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களனைவருக்கும் நன்றி, மற்றும் செம்பர் ஃபிடெலிஸ்.